# Telephone Conversation between PM and President of Egypt

April 17, 2020

## பிரதம மந்திரி மற்றும் எகிப்து ஜனாதிபதி இடையிலான தொலைபேசி உரையாடல்

ஏப்ரல் 17,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி எகிப்து ஜனாதிபதி மேன்மை பொருந்திய அப்டெல் பதெஹ் எல்-சிசி உடன் இன்று தொலைபேசியில் பேசினார்.

Covid-19 தொற்றுநோயை அடுத்து வளர்ந்து வரும் உலகளாவிய நிலைமை குறித்து தலைவர்கள் விவாதித்தனர் மற்றும் அந்தந்த அரசாங்கங்கள் தங்கள் மக்களைப் பாதுகாக்க எடுக்கும் நடவடிகைகள் குறித்த தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர்.ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்வதற்காக, அனுபவங்களின் தொடர்ச்சியான பரிமாற்றம் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இந்த கடினமான காலங்களில் மருந்து பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று பிரதம மந்திரி எகிப்திய ஜனாதிபதிக்கு உறுதி அளித்தார்.எகிப்தில் உள்ள இந்திய குடிமக்களுக்கு வழங்கப்படும் ஆதரவுக்கு ஜனாதிபதி எல்-சிசிக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

நெருக்கமான அனுபவப் பகிர்வை உறதிப்படுத்த தங்கள் அணிகள் தொடர்பில் இருக்கும் என்று இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

**நியூ டெல்லி**
**ஏப்ரல் 17, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.